# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண்.3

## 2012 – 2013

**சி.வி. சண்முகம்**
வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை
அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2012

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–2 |
| 2. | நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு | 2–5 |
| 3. | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 5 |
| 4. | செலவினங்களின் வகைப்பாடு | 5 |
| 5. | உயர்நீதிமன்றம், சென்னை | 6–7 |
| 6. | மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை | 8 |
| 7. | உரிமையியல் நீதிமன்றங்கள் | 9–14 |
| 8. | குற்றவியல் நீதிமன்றங்கள் | 14–16 |
| 9. | தனி நீதிமன்றங்கள் | 16–26 |
| 10. | தமிழ் வழியிலான சட்ட இதழ் | 26 |
| 11. | பதிமூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 27 |
| 12. | உயர்நீதிமன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்மொழி அறிமுகப்படுத்துதல் | 27–28 |
| 13. | உரிமையியல் நீதிபதி நியமனம் | 28 |
| 14. | நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கல் | 29–30 |

| | | |
|---|---|---|
| 15. | 2011–2012–ஆம் ஆண்டில் நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் நீதிமன்றங்களுக்கான இதர உள்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்காக நிதி ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம் | 30–32 |
| 16. | 2011–12–ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட புதிய நீதிமன்றங்கள் | 32–34 |
| 17. | புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் பிற வசதிகள் | 34–36 |
| 18. | தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | 36–43 |
| 19. | அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை | 44–45 |
| 20. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் | 45–48 |
| 21. | 2011–2012–ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள் | 48–55 |
| 22. | 2012–2013 ஆம் ஆண்டில் பகுதி–2ன் கீழான திட்டங்கள் | 55–56 |
| 23. | முடிவுரை | 56–57 |
| 24. | இணைப்பு 1 முதல் 9 வரை | 59–77 |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 3

## கொள்கை விளக்கக் குறிப்பு 2012–2013

**முன்னுரை**

“இறை காக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்” – குறள் 547

இக்குறளுக்கான பொருள் “நாட்டைக் காக்கும் அரசனை, அவன் செய்யும் தர்மம் காக்கும்” என்பதாகும். நீதிபரிபாலனம் நிலைநாட்டப்படுமானால், அந்நாடு செழிக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. காவல்துறை, வழக்குத்தொடர்வு அமைப்பு, நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை என்ற நான்கு முக்கிய பிரிவுகள் குற்றவியல் நிருவாக அமைப்பில் உள்ளன. காவல்துறை தனது செயல்பாட்டுமுறையில் குற்றம் புரிவதை தடுத்தும், குற்றங்களுக்கான தண்டனை பெறுவதற்காக குற்றச்சாட்டினை பதிவுசெய்தும், புலனாய்வு செய்தும், குற்ற அறிக்கையினை தாக்கல் செய்தும் பணியாற்றுகிறது. இத்தகைய நேர்வுகளில் வழக்குத்தொடர்வு அமைப்பு குற்றவாளியின் மீது வழக்கினைத் தொடரும். நீதித்துறை

வழக்கினை விசாரித்து குற்றவாளிகளைத் தண்டித்து, நிரபராதிகளைப் பாதுகாத்து பணியாற்றும். சிறைச்சாலைகள் குற்றவாளிகளைத் தண்டனைக் காலத்தில் சிறைப்படுத்தி பாதுகாக்கும். இதனை நிறைவேற்றும் வகையில் வழக்கு தொடர்கின்ற பொதுமக்களுக்கு விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என்ற இலக்கினை எய்தும் பொருட்டு அதற்குத் தேவையான கட்டட வசதி, மனித ஆற்றல் மற்றும் பிற அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. நீதித்துறையின் சுதந்திரத் தன்மையைப் பேணுவதிலும் இந்த அரசு முனைப்பாக செயல்பட்டு அதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது.

## 2. நீதித்துறையின் படிநிலை அமைப்பு

**2.1.** புதுதில்லியில் அமைந்துள்ள உச்ச நீதிமன்றம் நமது நாட்டின் தலைமை நீதிமன்றமாகும். மாநிலங்களில் செயல்பட்டு வரும் அனைத்து உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்குள் வருகின்றன. மாநில அளவிலுள்ள நீதித்துறையின் படிநிலை அமைப்பு இணைப்பு–1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**2.2.** கீழ்க்கண்ட நீதிமன்றங்கள் / அலுவலகங்கள், இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன:–

**நீதிமன்றங்கள்**

(i) மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் **–28**

(ii) சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் – **17**

(iii) மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் – **31**

(iv) கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் – **6**

(v) சார்பு நீதிமன்றங்கள் – **120**

(vi) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் – **174**

(viii) சென்னை பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் – **24**

(ix) தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள் **–28**

(x) குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் – **214**

(xi) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி **– 64**

(xii) தொழிலாளர் நல நீதிமன்றங்கள் – **12**

(xiii) குடும்பநல நீதிமன்றங்கள் – **7**

(xiv) பொருளாதார குற்ற வழக்குகளை விசாரிப்பதற்காக தனி நீதிமன்றங்கள் – **3**

(xv) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன் கொடுமைகள் தடுப்பு) சட்டம் மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக தனி நீதிமன்றங்கள் – **4**

(xvi) “தடா” சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள்– 4

(xvii) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் (Essential Commodities Act) தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக தனி நீதிமன்றங்கள் – 6

(xviii) போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின்படி தொடரப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – 4

(xix) மத்திய குற்றப்புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – 8

(xx) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – 2

(xxi) சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றம் ஒன்று

(xxii) மாவட்ட நீதிபதி பதவி நிலையில் மகளிர் நீதிமன்றங்கள் – 10

(xxiii) கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் – 49, (ஏற்கனவே விரைவு நீதிமன்றங்களாக செயல்பட்டவை)

(xxiv) குற்றவியல் நடுவர் பதவி நிலையில் விரைவு நீதிமன்றங்கள் – 24

(xxv) தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன்காக்கும் சட்டம், 1997 தொடர்பான வழக்குகளுக்காக தனி நீதிமன்றங்கள் – 3

(xxvi) நில எடுப்பு சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றங்கள் – 2

(xxvii) வனக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனி நீதிமன்றம் ஒன்று

(xxviii) மாலை நேர நீதிமன்றங்கள் – 56

(xxix) சந்தனக்கட்டை தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்கென சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்று

(xxx) ஊழல் தடுப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளுக்காக முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி தரத்தில் தனி நீதிமன்றங்கள் – 4

(xxxi) தொழில் வழக்கு தீர்ப்பாயம், சென்னை

**அலுவலகங்கள்**

(xxxii) நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை

(xxxiii) அரசு பேராட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை

## 3. நீதிமன்றங்களின் எண்ணிக்கை

சென்னை மாநகர் மற்றும் மாவட்டங்களில் தற்போதுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் முறையே இணைப்பு–2 மற்றும் இணைப்பு–3 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 4. செலவினங்களின் வகைப்பாடு

சென்னையில் உள்ள உயர்நீதிமன்றம் மற்றும் மதுரையில் உள்ள சென்னை உயர்நீதிமன்றக்கிளை ஆகியவைகள் குறித்த செலவினங்கள், “சாட்டிய செலவினம்” (Charged) என்றும் நீதிநிருவாகம் தொடர்பான பிற செலவினங்கள் “அனுமதிக்கப்பட்டவை” (Voted) என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**5. உயர்நீதிமன்றம், சென்னை**

**5.1.** மாநிலத்தில் உயர்நீதிமன்றமே தலைமை நீதிமன்றமாகும். உயர்நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 60 ஆகும். உயர்நீதிமன்றம், உரிமையியல் விவகார அசல் வழக்கு விசாரணை மற்றும் நீதிப் பேராணை அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மேல் முறையீட்டு விசாரணை அதிகாரமும் உயர்நீதிமன்றத்திடம் உள்ளது. உரிமையியல் விவகார அசல் வழக்குகளை பொறுத்தவரை சென்னை மாநகர எல்லைக்குள் ரூ.25 இலட்சத்திற்கும் அதிகமான மதிப்பு தொடர்பாக எழும் வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. உயர்நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளுக்குரிய வழக்குப் பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட புதுச்சேரியில் உள்ள நீதிமன்றங்கள் தொடர்பான அதிகார வரம்பையும் சென்னை உயர்நீதிமன்றம் கொண்டுள்ளது. உயர்நீதிமன்றத்தில் புதுச்சேரியில் உள்ள நீதிமன்றங்கள் தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவு, தமிழக அரசால் முதற்கண் ஏற்கப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது .

**5.2.** தலைமைப் பதிவாளர், உயர்நீதிமன்றத்தின் நிருவாகத் தலைவராக விளங்குகிறார். அவருக்கு துணையாக பதிவாளர்(கண்காணிப்பு), பதிவாளர்(நீதி), பதிவாளர் (நிருவாகம்), பதிவாளர்(மேலாண்மை), கூடுதல் பதிவாளர் (கண்காணிப்பு), மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களின் பதிவாளர் மற்றும் தனிச்செயலாளர், மாண்புமிகு தலைமை நீதிபதியின் செயலகத்தில் சிறப்புப் பணியில் உள்ள அலுவலர், இணைப் பதிவாளர் (மரபு) மற்றும் நொடித்தவர் சொத்தாட்சியர் ஆகியோர் உள்ளனர். பதிவாளர்களுக்கு உதவியாக மாஸ்டர், துணைப் பதிவாளர்கள், துணைப் பதிவாளர் மற்றும் தனி அலுவலர் (தொடர்பு), துணை நொடித்தவர் சொத்தாட்சியர், உதவிப் பதிவாளர்கள், முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் சார்–உதவிப் பதிவாளர்கள் ஆகியோர் உள்ளனர். நீதிபரிபாலனம் செய்தல் தவிர, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை நீதிமன்றங்களையும் சென்னை உயர்நீதிமன்றம் தன் முழு நிருவாகக் கட்டுப்பாட்டில் கொண்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள வழக்குகளின் விவரங்கள் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளின் விவரங்கள் முறையே இணைப்பு–7 மற்றும் 9–இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**6. மதுரையில் உள்ள சென்னை உயர்நீதிமன்றக்கிளை**

**6.1.** சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையானது, **24.07.2004** அன்று துவக்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் அதிகார எல்லை மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். சென்னை உயர்நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் போன்றே சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் அதிகார வரம்பும் (அசல் வழக்குகளின் அதிகார வரம்பினை தவிர்த்து) உள்ளது .

**6.2.** சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் நிருவாகத் தலைமைப் பொறுப்பு பதிவாளர் (நிருவாகம்) மற்றும் பதிவாளர் (நீதி) ஆகிய இருவரும் இணைந்து கவனிக்கின்றனர். இவர்களுக்கு உதவியாக துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவி பதிவாளர்கள் உள்ளனர். சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உள்ள வழக்குகளின் விவரங்கள் இணைப்பு–**8** இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 7. உரிமையியல் நீதிமன்றங்கள்

### 7.1. சென்னை மாநகர்

### (அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை

சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்களில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில் ஒரு மகளிர் நீதிமன்ற நீதிபதி உள்பட 9 நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் 18 நீதிபதிகள் மற்றும் உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் நிருவாக பொறுப்புடன் கூடிய ஒரு பதிவாளர் ஆக மொத்தம் 28 நீதிபதிகள் பணிபுரிகின்றனர். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் எல்லை முழுமைக்கும் விரிந்துள்ளது. பண விவகாரங்களில் உதவி நீதிபதி மற்றும் மாநகர முதன்மை நீதிபதி ஆகியோரின் அதிகார வரம்பு பின்வருமாறு :–

| உதவி நீதிபதி | முதன்மை நீதிபதி |
|---|---|
| ரூபாய் 10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம்) வரையில் | ரூபாய் 10,00,000/–(ரூபாய் பத்து இலட்சம்) க்கு மேற்பட்டு மற்றும் ரூபாய் 25,00,000/–(ரூபாய் இருபத்தைந்து இலட்சம்)க்கு மிகாமல் |

ஒரு வழக்கின் பண மதிப்பு ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம்)க்கு மிகுமாயின் அவ்வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட வேண்டும்.

சென்னை அமர்வு பிரிவிற்கு, மாநகர உரிமையியல் நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. ஊழல் தடுப்புச் சட்டம், **1988**–இன் கீழ் தொடரப்படும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென, ஒரு கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றம் செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாடு வைப்பீடுதாரர்களின் நலன்காக்கும் சட்டம் (நிதி நிறுவனங்களில்) **1997**, தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு தனி நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது .

**(ஆ) சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை**

மாவட்ட நீதிபதி பதவி நிலையில் உள்ள நீதிபதி, இந்நீதிமன்றத்திற்கு தலைமை வகிக்கிறார். மேலும், முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் **8** நீதிபதிகள், நிருவாகத்திற்கு பொறுப்பு வகிக்கின்ற பதிவாளர் ஒருவர் உட்பட உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் **8** நீதிபதிகள் உள்ளனர். பதிவாளர், சில குறிப்பிட்ட நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற நீதி நிருவாகப் பணிகளையும் கவனிக்கிறார். **1882**–ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்படி சிறுவழக்குகள் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதி மற்றும் பிற நீதிபதிகள், சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை செலுத்துகின்றனர். ஐந்தாவது

மற்றும் ஆறாவது சிறு வழக்கு நீதிமன்றங்கள், மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்கும் தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிபதிகளும் மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிபதிகள் சென்னை மாநகரத்திற்கான வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் இரண்டு, மூன்று, நான்கு, ஏழு மற்றும் எட்டாவது நீதிபதிகள் வாடகை கட்டுப்பாடு சம்மந்தப்பட்ட மேல்முறையீட்டு வழக்குளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்கள்.

### 7.2. வெளியூர் நீதிமன்றங்கள்

#### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்

**24.09.2011** அன்று அரியலூரில் அமைக்கப்பட்ட மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தையும் சேர்த்து மாநிலத்தில் மொத்தம் **31** மாவட்ட நீதிமன்றங்களும், **6** கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. திருப்பூரில் ஒரு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு அனுமதியளித்து ஆணை வெளியிட்டுள்ளது. மாவட்ட நீதிபதிகளே அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற

நீதிபதிகளாகவும் உள்ளனர். மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்கள் தொடர்பான சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகளின் பண விவகார அதிகார வரம்பானது உச்ச வரம்பின்றி ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்) க்கு மேற்பட்டதாகும். மாவட்ட நீதிபதிகளே மாவட்டம் முழுமைக்கும் உண்டான உரிமையியல் மேல் முறையீட்டு வழக்கு தொடர்பான அதிகார வரம்பை பெற்றுள்ளனர் மற்றும் தத்தம் ஆளுகைக்குட்பட்ட சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர்.

**(ஆ) சார்பு நீதிமன்றங்கள் (முதுநிலை உரிமையியல் நீதிபதி)**

மாநிலத்தில் மொத்தம் 120 சார்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. அனைத்து உரிமையியல் வழக்குகளிலும் தற்போது முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள சார்பு நீதிபதிகளின் பண விவகார அதிகார வரம்பானது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டும், ரூபாய் பத்து இலட்சத்திற்கு உட்பட்டதும் ஆகும். உரிமையியல் நீதிமன்றச் சட்டம், 1892-ல் அவர்களின் சட்ட ஆட்சி எல்லையானது வரையறுக்கப்பட்டுள்ளது. முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட

பகுதியில் இருக்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராக, ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புக்குட்பட்டு தொடரப்படும் மேல்முறையீடுகளுக்கான மேல் முறையீட்டு அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். முதுநிலை உரிமையியல் நீதிபதிகள், உதவி அமர்வு நீதிபதிகளாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களின் நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர்.

**(இ) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்(உரிமையியல் நீதிபதி)**

மாநிலத்தில் மொத்தம் 174 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. உரிமையியல் நீதிபதிகளாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான மதிப்புடைய சொத்து வழக்குகளை விசாரித்து வருகின்றனர். ஒவ்வொரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பைப் பெற்றுள்ளது. இந்த நீதிமன்றங்கள் ரூ.20,000/– வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன. தங்கள் வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் செயலாற்றுகின்றனர்.

**(ஈ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி)**

மாநிலத்தில், 64 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாநிலத்தில் சில பகுதிகளில் உள்ள வழக்காடும் பொதுமக்கள், தங்கள் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாததால், தங்களின் உரிமையியல் தொடர்பான குறைகளைக் களைய தத்தம் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதியில் உள்ள உரிமையியல் நீதிமன்றங்களை நாட வேண்டி இருந்தமையால், இடையூறுகளை சந்திக்க வேண்டி இருந்தது. அத்தகைய பொதுமக்களின் இடர்பாடுகளைக் களையும் வகையில் இந்நீதிமன்றங்கள், உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன.

## 8. குற்றவியல் நீதிமன்றங்கள்

### 8.1. சென்னை மாநகர்

சென்னை மாநகரில் தலைமை பெருநகர குற்றவியல் நீதிமன்றம், கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நீதிமன்றம் உள்பட 24 பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தலைமை பெருநகர குற்றவியல் நடுவர், கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது மற்றும் பதினொன்றாவது பெருநகர குற்றவியல் நடுவர்கள், முதுநிலை

உரிமையியல் நீதிபதி பதவி நிலையைச் சார்ந்தவர்கள் ஆவர். ஏனைய அனைத்து பெருநகர குற்றவியல் நடுவர்களும் உரிமையியல் நீதிபதி பதவி நிலையைச் சார்ந்தவர்கள் ஆவர். பெருநகர குற்றவியல் நடுவர்கள் சென்னை மாநகரில் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட காவல் நிலைய வழக்குகளை விசாரிக்கின்றனர்.

### 8.2. வெளியூர் நீதிமன்றங்கள்

#### (அ) மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்

மாவட்ட நீதிபதிகளே அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். தற்பொழுது மொத்தம் 31 மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்கள் தொடர்பான சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. திருப்பூரில் ஒரு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு அனுமதியளித்து ஆணை வெளியிட்டுள்ளது.

#### (ஆ) தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

மாநிலத்தில் இருபத்தெட்டு தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தலைமைக் குற்றவியல் நடுவர்களுக்கு, சிலவகை வழக்குகளில் உதவி

அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தலைமை குற்றவியல் நடுவர்கள் அவரவர் மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். திருப்பூரில் ஒரு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் துவக்க அரசு அனுமதி அளித்து ஆணை வெளியிட்டுள்ளது.

**(இ) குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும் ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. தற்போது மாநிலத்தில் குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி நிலையில் உள்ள 21 விரைவு நீதிமன்றங்கள் உட்பட மொத்தம் 214 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**9. தனி நீதிமன்றங்கள்**

**(அ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் மொத்தம் 12 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சென்னையில் நான்கும், வேலூரில் இரண்டும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்றும் உள்ளன. மாநிலத்தில் அனைத்து பகுதிகள் மீதும் அதிகார வரம்பு

கொண்ட தொழில் தீர்ப்பாயம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. மேற்கண்ட தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயம் ஆகிய நீதிமன்றங்களின் தலைமை அலுவலர்கள், மாவட்ட நீதிபதி பதவி நிலையில் உள்ளனர். இந்நீதிமன்றங்கள் அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த சர்ச்சைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்கள் மீதும் தீர்ப்புரைக்கின்றன. அனைத்து தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயம் ஆகியவைகளின் தலைமை அலுவலர்கள், அவரவர்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முகாம் நீதிமன்றங்கள் நடத்தி தொழிலாளர் தொடர்பான சர்ச்சைகள் மற்றும் இழப்பீட்டு கோரிக்கை மனுக்களை விசாரித்து தீர்ப்புரைக்கின்றனர்.

**(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம் மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச்சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்**

நான்கு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம், 1989 மற்றும் குடிமை

உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில் விசாரணை மேற்கொள்ள 14 மாவட்டங்களை அதிகார எல்லையாகக் கொண்டு செயல்படுகின்றன. இந்நீதிமன்றங்கள் மற்றும் அவற்றின் அதிகார எல்லைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | நீதிமன்றங்களின் பெயர் | அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | IV கூடுதல் அமர்வு நீதிமன்றம், மதுரை | (i) மதுரை<br>(ii) திண்டுக்கல்<br>(iii) தேனி<br>(iv) இராமநாதபுரம்<br>(v) சிவகங்கை<br>(vi) விருதுநகர் |
| 2. | II கூடுதல் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் | (i) தஞ்சாவூர்<br>(ii) நாகப்பட்டினம்<br>(iii) திருவாரூர் |
| 3. | III கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருநெல்வேலி | (i) திருநெல்வேலி<br>(ii) தூத்துக்குடி<br>(iii) கன்னியாகுமரி |
| 4. | II கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | (i) திருச்சிராப்பள்ளி<br>(ii) புதுக்கோட்டை |

மற்ற மாவட்டங்களைப் பொறுத்த அளவில் தொடர்புடைய மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றங்களே மேற்சொல்லப்பட்ட சட்டங்களின் கீழ் வரும் வழக்குகளில் விசாரணை மேற்கொள்கின்றன .

**(இ) பொருளாதாரக் குற்றங்களுக்கான தனி நீதிமன்றங்கள்**

பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. சென்னையில், மாவட்ட நீதிபதி நிலையில் இரண்டு கூடுதல் முதன்மை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும், (பொருளாதாரக் குற்றங்கள்–1 மற்றும் பொருளாதாரக் குற்றங்கள்–2) மற்றும் மதுரையில், முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் ஒரு கூடுதல் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் உள்ளன.

**(ஈ) குடும்ப நல நீதிமன்றங்கள்**

மாநிலத்தில் மொத்தம் ஏழு குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. சென்னையில் நான்கும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒரு நீதிமன்றமும் உள்ளன. இத்துடன் மூன்று விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன.

**(உ) தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன் கீழான வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்கள்**

தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997 [Tamil Nadu Protection of Interests of Depositors (in Financial Establishments) Act, 1997] தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒரு தனி நீதிமன்றம் வீதம் மூன்று நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

**(ஊ) மத்திய குற்றப்புலனாய்வுத்துறை வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்கள்**

மத்திய குற்றப் புலானய்வுத்துறை வழக்குகளை விசாரிக்க எட்டு தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, சென்னையில் ஆறும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒன்றுமாக அவைகள் செயல்பட்டு வருகின்றன.

**(எ) ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்கள்**

ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் தொடரப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தலா ஒன்று என மொத்தம் நான்கு தனி நீதிமன்றங்கள்

முறையே 13.10.2011, 03.10.2011, 13.08.2011 மற்றும் 14.10.2011 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**(ஏ) போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்கள்**

போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை மேற்கொள்ள, சென்னை மற்றும் மதுரையில் தலா இரண்டு வீதம் மொத்தம் நான்கு தனி நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(ஐ) அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்கள்**

அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரணை மேற்கொள்வதற்காக, மாவட்ட அமர்வு நீதிபதி பதவி நிலையில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று என மொத்தம் ஆறு தனி நீதிமன்றங்கள் உள்ளன.

**(ஒ) சந்தனக் கட்டை தொடர்பான குற்றங்களுக்கான தனி நீதிமன்றம்**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் சந்தனக் கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்படுகிறது.

**(ஓ) இருப்பூர்தி நீதிமன்றங்கள்**

இந்திய இருப்பூர்திச் சட்டத்தின் கீழ், பயணச் சீட்டில்லா பயணம் மற்றும் ஏனையக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக, வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் சென்னை எழும்பூர் மற்றும் சென்னை சென்ட்ரல் இருப்பூர்தி நிலையங்களிலும், இருப்பூர்தி குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இருப்பூர்தி குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கான செலவை மாநில அரசே ஏற்கின்றது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத்தொகை மாநில அரசின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது .

**ஔ) நடமாடும் நீதிமன்றங்கள்**

சென்னையில், இரண்டு நடமாடும் நீதிமன்றங்கள், **1988**–ஆம் ஆண்டு மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் போக்குவரத்து தொடர்பான சிறு குற்ற வழக்குகளை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ளன. இந்நீதிமன்றங்கள் வழக்குகளில் விரைந்து தீர்வுகள் பெறவும் காவல் துறை அதிகாரிகள், நீதிமன்றம் மற்றும் பொதுமக்களின் கால விரயத்தைத் தவிர்க்கவும் வழிவகுக்கிறது. மேலும், காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும்

திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒரு நீதிமன்றம் வீதம் 10 நடமாடும் நீதிமன்றங்களை அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது.

**க) 1987–ஆம் ஆண்டு "தடா" சட்டம் தொடர்பான தனி நீதிமன்றங்கள்**

1987 ஆம் ஆண்டு 'தடா' சட்டமானது நீக்கப்பட்ட நிலையிலும், இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரிக்க மாநிலத்தில் நான்கு தனி நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. சென்னையில் முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்களும், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் தொடர்புடைய முதன்மை மாவட்ட நீதிபதிகள் இவ்வழக்குகளை விசாரணை செய்கின்றனர்.

**ங) குண்டு வெடிப்பு வழக்குகளுக்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிக்க சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. சென்னை, பூவிருந்தவல்லியில் செயல்பட்டு வரும் இந்நீதிமன்றம், பொடா சட்டம், 2002 (மத்திய சட்டம் 15/2002)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

**ச) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளுக்கான நீதிமன்றம்**

மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம், தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்கிறது.

**ஞ) மகளிர் நீதிமன்றம் (மகிளா நீதிமன்றங்கள்)**

மகிளா நீதிமன்றங்கள் என நன்கு அறியப்பெற்ற மகளிர் நீதிமன்றங்கள், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் பிரத்யேக விசாரணை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் ஆகும். இந்நீதிமன்றங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், பெரம்பலூர், கடலூர், செங்கல்பட்டு மற்றும் புதுக்கோட்டை ஆகிய பத்து இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**ட) கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் (Additional Master Courts)**

கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் நான்கு சென்னை உயர்நீதிமன்றத்திலும், நான்கு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திலும் மற்றும் இரண்டு சென்னை, சிறு வழக்குகள் நீதிமன்றத்திலும் ஆக மொத்தம் 10 நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. வழக்காடும் நபர்களை அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் முன்னிலை செய்யும் நடைமுறை மற்றும் வழக்கின் சாட்சியங்களை மட்டும் பதிவு செய்யும் பணி

நிறைவடையும் வரையில் விசாரணை செய்வதற்காக செயல்படுகின்றன.

**ண) அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை**

மாவட்ட நீதிபதி பதவி நிலையில் சென்னையிலுள்ள அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். இவ்விரு அதிகாரிகளும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் உரிய வயதடையாதவர்கள் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். மேலும், இவர்கள் அரசு தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டத்தின் விதிமுறைகளுக்கிணங்க, அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றும் வண்ணம் செயல்பட்டு வருகின்றனர்.

**த) மத்திய குற்றப்பிரிவு மற்றும் குற்றப் பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை வழக்குகளுக்கான நீதிமன்றங்கள்**

சென்னை மாநகரில் மத்திய குற்றப் பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வு (குற்றப் பிரிவு) துறையின்கீழ் பதிவாகி விசாரணை செய்யப்படும் மோசடி மற்றும் நூதன வழக்குகளின்

தன்மைகளைக் கருத்தில் கொண்டு, இவ்வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்கும் பொருட்டு, சென்னையில் முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் உள்ள ஒரு நீதிபதியைக் கொண்டு புதிய நீதிமன்றம் அமைக்க அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது.

**ந) மாலை நேர நீதிமன்றங்கள்**

நீதித்துறை நடுவர் மற்றும் பெருநகர குற்றவியல் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள சிறு வழக்குகளை விரைந்து விசாரணை நடத்துவதற்கு, மாநிலத்தில் **56** மாலை நேர நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் இணைப்பு–4 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. தமிழ் வழியிலான சட்ட இதழ்

சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற சிறப்பான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை வெளிக்கொணரும் வகையில், ‘தீர்ப்பு திரட்டு’ என்ற பெயரில் தமிழ் வழியிலான சட்ட இதழ், வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயனுக்காக மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது.

## 11. பதிமூன்றாவது நிதிக் குழு பரிந்துரை அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

நீதி வழங்குதலை மேம்படுத்தும் பொருட்டு, 13–வது நிதிக்குழு, 2010–2011 முதல் 2014–2015 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு தமிழ்நாட்டுக்கு எட்டு திட்டங்களை செயல்படுத்த ரூ.252.43 கோடி வழங்க பரிந்துரைத்துள்ளது. இத்தொகையில் 5048.60 இலட்சம் ரூபாயை 2010–11–ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு விடுவித்துள்ளது. வரும் ஆண்டுகளுக்கான மத்திய அரசின் ஒதுக்கீட்டினை எதிர் நோக்கி, இவ்வரசு ரூ.130.84 கோடி செலவிலான திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிட்டுள்ளது.

## 12. உயர்நீதிமன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்மொழி அறிமுகப்படுத்துதல்

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 348(2) உடன் படிக்கப்பட்ட 1963–ம் ஆண்டு அலுவல் மொழிகள் சட்டம், பிரிவு 7ல் வரையறுத்துள்ளவாறு, அந்தந்த மாநில ஆட்சிமொழியை அந்தந்த மாநிலத்திலுள்ள உயர்நீதிமன்றத்தின் ஆணைகள், தீர்ப்புரைகள் மற்றும் உயர்நீதிமன்றத்தின் செயல்முறைகள் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பீகார், உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசம்

ஆகிய மாநில உயர்நீதிமன்றங்களில் அலுவல் மொழியாக, அந்தந்த மாநில ஆட்சி மொழியே பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தமிழ்நாட்டிலும் சென்னை உயர்நீதிமன்ற ஆணைகள் மற்றும் தீர்ப்புரைகள் ஆகியவற்றில் தமிழைப் பயன்படுத்துவதற்கு மேதகு குடியரசு தலைவரின் ஒப்புதலை பெற மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இதுதொடர்பாக, இவ்வரசு, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்நேர்வில், மத்திய உள்துறை அமைச்சக அலுவல் மொழிகள் துறை செயலாளருக்கு 30.03.2012 அன்று கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

**13. உரிமையியல் நீதிபதி நியமனம்**

தமிழ்நாடு மாநில நீதிப்பணியில் காலியாக உள்ள 185 உரிமையியல் நீதிபதி பணியிடங்களுக்கு நேரடி நியமனம் வாயிலாக தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இத்தேர்வு பணிக்கென ஆகும் செலவினங்களை மேற்கொள்வதற்காக, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு ரூ.40.92 இலட்சம் தொகையை அரசு ஒப்பளிப்பு வழங்கி ஆணையிட்டுள்ளது.

## 14. நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கல்

**14.1.** மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம், தேசிய தகவல் மையத்துடன் இணைந்து **2005**–ஆம் ஆண்டில் நாடு முழுவதும் உள்ள மாவட்ட மற்றும் சார்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் பொருட்டு, ஒரு திட்டத்தை அறிவித்தது. அதனைத் தொடர்ந்து, மத்திய அரசு **2006**–ஆம் ஆண்டில் தகவல் மற்றும் கணினி தொழில்நுட்பத்தை நீதித்துறையில் செயல்படுத்த மின்னணு நீதிமன்றம் (e-Courts) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ், அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் மடிக்கணினிகள், அச்சுப் பொறிகள் மற்றும் அவர்களின் இல்லங்களில் அகன்ற அலைவரிசை இணைப்பு ஆகியவை வழங்கப்பட்டன. மேலும், இத்திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் கணினி சர்வர் அறை மற்றும் நீதித்துறை சேவை மையம் ஆகியவை அமைப்பதற்குரிய இடத்தை தயார் செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு கணினி மற்றும் அதன் உபபொருட்கள் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலுள்ள அனைத்து நீதிமன்ற வளாகங்களுக்கும் தேசிய தகவல் மையத்தால் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிக்கென, புது தில்லியிலுள்ள தேசிய தகவல் மையம் ரூ.**4.02** கோடியை சென்னை உயர்

நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது. மேலும், மாவட்ட நீதிமன்றங்களுக்கு டீசல் மின்னாக்கிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் டீசல் மின்னாக்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

**14.2.** சென்னை உயர்நீதிமன்ற இணையதளத்தில், ஏனைய தகவல்களுடன் வழக்குகளின் விவரம், அவற்றின் நிலை ஆகியவை வெளியிடப்படுகின்றன. வழக்காடும் பொதுமக்கள் தங்கள் வழக்குகளின் நிலைகுறித்து அறிய தொலைபேசியில் IVRS (Interactive Voice Response System) வசதி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

## 15. 2011–12ம் ஆண்டில் நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் நீதிமன்றங்களுக்கான இதர உள்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்காக நிதி ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம்

- இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானையில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு **ரூ.187.43** இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிக்கான

குடியிருப்பு ரூ.285.49 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- சேலம் மாவட்டம், மேட்டூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ரூ.496.72 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- சென்னை எழும்பூரிலுள்ள நீதிமன்ற வளாகத்தில், 7 நீதிமன்றங்களுக்கு கூடுதல் கட்டடம் ரூ.868.19 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற இணைப்புக் கட்டடத்தை அடுத்த பணியாளர்கள் கழிவறை அமைந்த கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் ரூ.18.00 இலட்சம் செலவில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- மதுரை, கிருஷ்ணகிரி, தேவக்கோட்டை, திண்டுக்கல், புதுக்கோட்டை, பரமத்தி மற்றும் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளுக்கு சுற்றுச் சுவர்

ரூ.48.74 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- சார்நிலை நீதிமன்றங்களுக்கு ஒளி நகல் கருவிகள் மற்றும் அச்சுப் பொறிகள் ஆகியன ரூ.214.16 இலட்சம் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- கடலூர் மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றம் மற்றும் முதன்மை உரிமையியல் நீதிமன்றம், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியிலுள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மற்றும் சென்னையிலுள்ள சிறுவழக்குகள் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் ரூ.24.32 இலட்சம் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 16. 2011–12–ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட புதிய நீதிமன்றங்கள்

- மதுரை மாவட்டம், பேரையூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் உள்ள கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தினை, திருச்செந்தூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் என இரண்டு நீதிமன்றங்களாக மாற்றியமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- புதுக்கோட்டையில் புதியதாக குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- நீலகிரி மாவட்டம், பந்தலூரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- பூதப்பாண்டியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மாற்றியமைப்பதன் மூலம் பூதப்பாண்டியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- சென்னை பெருநகர காவல் ஆணையரக மத்திய குற்ற பிரிவு வழக்குகள் (ஏமாற்றுதல் குறித்த வழக்குகள்) மற்றும் சென்னை பெருநகர குற்ற புலனாய்வு துறை வழக்குகளை விசாரிப்பதற்காக முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் சென்னையில் ஒரு தனி நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- செய்யாரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

## 17. புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் பிற வசதிகள்

- உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு கூடுதலாக 32 நேர்முக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு கூடுதலாக 25 உதவி பிரிவு அலுவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

- சென்னை உயர்நீதிமன்றத்தின் 150–வது ஆண்டு விழா நிகழ்ச்சிக்கான செலவினங்களை மேற்கொள்வதற்காக ரூ.40.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

- சென்னை உயர்நீதிமன்றத்தின் 150–வது ஆண்டு விழாவை முன்னிட்டு உயர்நீதிமன்றத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஓர் ஊதிய உயர்வுக்கு நிகரான பணவெகுமதி (ஒரு முறை மட்டும்) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓட்டுநர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஈட்டுப்படியை ரூ.190/- லிருந்து ரூ.380/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் மாண்புமிகு நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக பழைய கைபேசிகளுக்குப் பதிலாக ரூ.9,43,400/- செலவில், 53 புதிய நோக்கியா கைபேசிகள் வாங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அமைவதற்கு கையகப்படுத்திய நிலங்களுக்கு உரிய இழப்பீட்டு தொகையாக ரூ.8.46 கோடி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்தில் சுத்திகரிக்கப்பட்ட குளிர்ந்த குடிநீர் வழங்குவதற்காக ரூ.60,750/-செலவில் இரண்டு குளிரூட்டிகள் வாங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களுக்கு சட்ட புத்தகங்கள் மற்றும் சட்ட இதழ்கள் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையான ஒப்பளிப்பு தொகையை ரூ.64.00 இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நூலகத்திற்கு சட்ட புத்தகங்கள், சட்ட இதழ்கள் ஆகியவை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையான ஒப்பளிப்பு தொகையை ரூ.12.50 இலட்சமாக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை ஆயத்தையும், மதுரைக் கிளையையும், காணொளிக் காட்சி மூலம் இணைப்பதற்கு ரூ.5,73,597/– ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

## 18. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

**நோக்கம்**

18.1. 1987–ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழு (1994–ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது) சட்டம், சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு

இலவசமாகவும், சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கியும், பொருளாதார காரணம் அல்லது இதர இயலாமையாலோ எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக்கூடாது என்பதனை உறுதி செய்யவும், தகராறுகளுக்கு தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களை (Lok Adalat) சட்டப்பூர்வமாக அமைக்கவும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குண்டான பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும் உதவுகின்றன. மேற்படி சட்டத்தின்படி, மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள், வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவைகள் தமிழகத்தில் **01.11.1997** முதல் செயல்பட்டு வருகின்றன.

**சட்ட உதவி பெறுவதற்கான தகுதியுடையோர்**

**18.2.** ஒவ்வொரு நபரும் வழக்கு தாக்கல் செய்யவோ அல்லது வழக்கு ஒன்றில் எதிர்த்து வாதாடுவதற்கோ இச்சட்டத்தின் கீழ் சட்ட உதவிக்கு தகுதியுடையவராவார். அப்படிப்பட்ட நபர் யாவரெனில்,

- பட்டியலின வகுப்பினர் அல்லது பழங்குடியினர் இனத்தைச் சார்ந்திருக்க வேண்டும்.

- அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 23–ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மனிதர்களை விற்பது மற்றும் வாங்குவது தொடர்பான குற்றத்தில் பாதிக்கப்பட்டவராகவும், பிச்சை எடுக்கும் நபராகவும் இருத்தல் வேண்டும்.

- பெண்கள் அல்லது குழந்தைகள்.

- 1995–ஆம் ஆண்டு ஊனமுற்றவர்கள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்றல்) சட்டப் பிரிவு 2, உட்பிரிவு i–ன் கீழ் குறிப்பிடப்பட்ட மாற்றுத் திறனாளிகள்.

- பேரிடர்கள், இனக் கலவரம், சாதிய வன்கொடுமைகள், வெள்ளம், வறட்சி, நிலநடுக்கம் அல்லது தொழிற்சாலை பேரழிவுகளில் பாதிப்பிற்குள்ளான நபர்கள் அல்லது,

- தொழிற்சாலை தொழிலாளர்கள்,

- சிறைக் காவலில் உள்ளோர், பாதுகாப்பு இல்லத்தில் காவலில் உள்ளோர், இளங்குற்றவாளிகள் இல்லம், மனநல மருத்துவமனை அல்லது இல்லத்தில் இருப்போர்,

- 1987–ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழுச் சட்டம் பிரிவு 12 (எச்)ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு வருமானத்திற்கு குறைவாக வருமானம் பெறுபவர்கள்.

**18.3.** பாதிக்கப்பட்ட நபர்கள், சட்ட உதவிக்கான வேண்டுகோள் விண்ணப்பங்களை, எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ கட்டணம் ஏதுமின்றி தெரியப்படுத்தலாம்.

### ஆலோசனை மற்றும் சமரச மையங்கள்

**18.4.** ஆலோசனை மையங்கள் மற்றும் சமரச மையங்கள் ஆகியன நீதிமன்ற தீர்ப்புக்கு முந்தய சமரசம் செய்து வைக்கும் மையங்களாக செயல்பட்டு வருகின்றன. ஆலோசனை வழங்கும் வழக்கறிஞர், இரு தரப்பினரிடையே ஏற்படும் பிரச்சனைகளை பேசித் தீர்த்துக் கொள்வதற்கான, அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறார். இவ்வாறு,

பிரச்சனைகளை அடிப்படையிலேயே தீர்த்து வைக்கின்ற ஒரு மாற்று முறை தீர்ப்பு அமைப்பாக, இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**மகளிருக்கான உதவி மையங்கள்**

**18.5.** மணவாழ்க்கை தொடர்பான பிரச்சனைகள் மற்றும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் மகளிருக்கான உதவி மையங்கள் மூலமாக உதவிகள் வழங்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**சட்டம் சார்ந்த உதவிகள்**

**18.6.** குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர், சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அரசால் அளிக்கப்படும் சமூக நலத்திட்டங்களான முதியோர் ஓய்வூதியம், விதவைகள் ஓய்வூதியம் போன்ற உதவிகளை அரசிடமிருந்து பெறுவதற்கும், இவ்வமைப்புகள் இலவசமாக சட்ட உதவிகள் வழங்குகின்றன.

**மக்கள் நீதிமன்றம் (Lok Adalat)**

**18.7.** எந்த ஒரு நீதிமன்றத்திலும் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது அந்த நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகின்ற, ஆனால் வழக்காகத் தாக்கல் செய்யப்படாத எந்த பொருள் பற்றியும், அதில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே ஒரு உடன்பாடு அல்லது தீர்விற்கு வருவதற்கு மக்கள் நீதிமன்றங்கள் உதவி செய்கின்றன. மக்கள் நீதிமன்றங்களில் வழங்கப்படும் தீர்ப்பு, உரிமையியல் நீதிமன்றங்களாலோ அல்லது அதுபோன்ற பிற நீதிமன்றங்களாலோ வழங்கப்படும் தீர்ப்பாணையைப் போன்றதாகும். மேலும் மக்கள் நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பே இறுதியானது. இத்தீர்ப்பானது, வழக்குத் தொடுத்த அனைத்துத் தரப்பினரையும் கட்டுப்படுத்தும். இத்தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்ய இயலாது. மக்கள் நீதிமன்றம் உரிமையியல் விதித்தொகுப்புச் சட்டம், **1908–ன்** கீழ் வருவதோடு, உரிமையியல் நீதிமன்றத்திற்கிணையான அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

**18.8.** சட்டப் பணிகள் ஆணைக் குழுவிற்கு, **2011–2012–**ஆம் ஆண்டில் மக்கள் நீதிமன்றங்கள் வாயிலாக சட்ட உதவி பெறுவதற்கு **ரூ.296.60** இலட்சம், அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், சமரசம் செய்பவர்கள்,

நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர் ஆகியோருக்கு பயிற்சியளிப்பதற்காக **2011–2012–**ஆம் ஆண்டில், சட்டப் பணிகள் ஆணைக் குழுவிற்கு ரூ.**171.43** இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**சட்ட உதவி முகாம் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்**

**18.9.** ஊரகப் பகுதிகளில் சட்ட உதவி முகாம் மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்கள் குறிப்பிட்ட காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் இந்த முகாம்களில் கலந்து கொள்கின்றனர். சட்டப்பணிகள் குழுவால் அனுப்பி வைக்கப்படும் வழக்கறிஞரும் இம்முகாமில் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்கள் பெறுவதோடு, அம்மனுக்கள் மீது சட்ட ஆலோசனைகளையும் வழங்குகிறார். பொதுமக்களிடம் பெறப்படும் மனுக்கள், இம்முகாம்களில் கலந்து கொண்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களைக் கொண்டு பரிசீலனை செய்யப்பட்டு உடனடித் தீர்வு காணப்படுகிறது.

**மத்திய சிறைச்சாலைகளில் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றம்**

**18.10.** மத்திய சிறைகள் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச்சிறையிலும், சிறை நீதிமன்றங்கள் மற்றும் சட்ட உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை, புழலில் உள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம்

இயங்கி வருகிறது. சிறைச்சாலை வழக்குகளை விரைந்து முடிக்க, சிறப்பு குற்றவியல் வழக்கு நடத்துனர் ஒருவர் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்**

**18.11.** குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்கு ஆஜர்படுத்தப்படும் நபர்கள், வழக்குரைஞர்கள் வைத்துக்கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிக்க சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம், வழக்குரைஞர்கள், குற்றவியல் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

**தொலைபேசி வழி சட்ட உதவி**

**18.12.** தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில், சட்ட உதவி மையம் ஒன்று இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும், அனைத்து வேலை நாட்களிலும், வழக்கறிஞர்கள் அனுப்பி வைக்கப்பட்டு, பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தொலைபேசி வாயிலாகவும், நேரிலும், தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. சட்ட உதவி கோரும் பொதுமக்கள் **044 – 25342441** என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

**19. அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை**

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரையில் உள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை ஆகியவற்றின் சட்ட அலுவலர்களை கொண்டதாக அரசு வழக்காடும் துறை உள்ளது. தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞர் அதன் தலைவராவார். மாநில அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் I முதல் V, சென்னை உயர்நீதிமன்றத்தின் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், அரசு உரிமையியல் வழக்கறிஞர் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் கூடுதல் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், அரசு சிறப்பு வழக்கறிஞர் ஆகியோரின் கீழ், இத்துறையின் பகுதி அலுவலகங்கள் செயல்படுகின்றன. அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்கள் ஆகியோர் சட்டம் சார்ந்த பொருண்மைகளில் அரசுக்கு தகுந்த ஆலோசனை வழங்குவதோடு மட்டுமல்லாமல், தேவைப்படின் உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மாநில அரசு சார்பில் ஆஜராகி வாதிடுகின்றனர். அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்–IV, குறிப்பாக உச்சநீதிமன்றத்தில், தமிழக அரசு தொடர்பான வழக்குகளில் வாதாட நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாடு மாநில

அரசின் தலைமை வழக்கறிஞர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள இணைய வழி இதழ்கள் / மென்பொருள் வசதி மற்றும் 9 பகுதி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இணைய தள மென்பொருள் வசதிகள் ஆகியவற்றை பயன்படுத்துவதன் மூலம், சட்ட அலுவலர்கள் பயனடைகின்றனர்.

## 20. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

**20.1.** குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம், மாநிலத்திலுள்ள குற்றவியல் வழக்குகளை முழுக்கட்டுப்பாட்டுடன் திறம்பட நடத்தப்படுவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, மாநிலத்தில் பணியாற்றும் அரசு குற்ற வழக்கு நடத்துனர்களின் பணிகளைக் கண்காணிக்கிறது.

### குற்ற வழக்குத் தொடர்வு துறை அமைப்பு

**20.2.** குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் இயங்கி வருகிறது. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம், சென்னை தலைமையகத்தில், ஒரு இணை இயக்குநர் (நிர்வாகம்), உதவி இயக்குநர் தரத்தில் ஒரு இணை இதழ் ஆசிரியர் (வெளியீடு) மற்றும் அமைச்சு பணியாளர்களைக் கொண்டுள்ளது. குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநருக்கு

உதவியாக, ஒரு இணை இயக்குநர் (நிர்வாகம்) உள்ளார். மேலும், மண்டல அளவில் 11 துணை இயக்குநர்கள் மண்டலப் பிரிவுத் தலைவர்களாக உள்ளனர். 14 உதவி இயக்குநர்கள் மாவட்ட அளவில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் மாவட்ட நிர்வாகப் பிரிவுத் தலைவர்களாகவும் செயலாற்றி வருகின்றனர். தமிழ்நாடு குற்ற வழக்கு நடத்துனர், மாதாந்திர இதழ், பிரதி மாதமும் வெளியிடுவதற்காக, தலைமையிடத்தில் உதவி இயக்குநர் தரத்திலான இணை இதழ் ஆசிரியர் (வெளியீடு) செயல்படுகிறார்.

**20.3.** மண்டல அலுவலகங்கள், குற்ற வழக்குத் தொடர்வுத் துறையின் அமைச்சு பணியாளர்களைக் கொண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களின் பணியாளர்களைப் பெற்றும் செயல்பட்டு வருகின்றன. தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில், குற்றவியல் வழக்குகளை நடத்த 29 கூடுதல் அரசு வழக்கு நடத்துனர்கள் உள்ளனர். மேலும், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் இருக்கும் வழக்குகளை நடத்த, அரசு உதவிக் குற்ற வழக்கு நடத்துனர் நிலை–1 தரத்திலான சட்ட அலுவலர்களும், பிற ஊர்களிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் இருக்கும் வழக்குகளை நடத்த, அரசு உதவிக் குற்ற வழக்கு நடத்துனர் நிலை–2 தரத்திலான சட்ட அலுவலர்களும் உள்ளனர்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், மாநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில், நீதித்துறை நடுவரின் நிலையினைப் பொறுத்து அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர், நிலை–1 அல்லது நிலை–2 தரத்திலான சட்ட அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**பணியிடைப் பயிற்சி**

**20.4.** அரசு குற்ற வழக்கு நடத்துனர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இப்பணியிடைப் பயிற்சியானது, நிரந்தர மற்றும் குறித்தகால நியமன முறையின்கீழ் பணிபுரியும் குற்ற வழக்கு நடத்துனர்கள் **645** நபர்களுக்கு, **21** அணிகளில் **(30** நபர்கள் வீதம்) அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அணியின் பயிற்சிகால அளவு **10** வேலை நாட்கள் ஆகும். மாநிலத்திலுள்ள அனைத்து குற்ற வழக்கு நடத்துனர்களுக்கும், **71** சட்டங்களை உள்ளடக்கிய கைபேசியில் பயன்படுத்தும் மென்பொருள் வழங்கவும் மற்றும் குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் வழக்கு நடத்துனர்களின் பயன்பாட்டிற்காக சட்டப்புத்தகங்கள் வாங்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

**20.5.** தமிழ்நாடு குற்ற வழக்கு தொடர்வுத் துறையில் அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–**2** ஆக பணிபுரியும்

55 சட்ட அலுவலர்களை அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–1ஆக பதவி உயர்த்த 2010–2011–ஆம் ஆண்டிற்கான தேர்ந்த பெயர்ப்பட்டியல் 15.03.2012 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

**20.6.** தமிழ்நாடு குற்ற வழக்கு தொடர்வுத் துறையில் அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–2 பணிக்கு 2009–2010–ஆம் ஆண்டிற்கான 83 காலி பணியிடங்களுக்கு தகுதியான நபர்களைத் தெரிவு செய்ய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக 23.07.2011 மற்றும் 24.07.2011 ஆகிய நாட்களில் எழுத்துத்தேர்வு நடத்தப்பெற்று அப்பணியிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 2010–2011–ஆம் ஆண்டிற்கான அரசு உதவி வழக்கு நடத்துனர் நிலை–2 பணிக்கு, 47 காலி பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திடம் கேட்டுக் கொண்டதையடுத்து அவ்வாணையாமானது 02.04.2012 அன்று இதற்குரிய அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

## 21. 2011–2012–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

### நீதித்துறை பயிற்சிக் கழகம்

**21.1.** உச்சநீதிமன்ற ஆணையின்படி, சென்னை எழும்பூரிலுள்ள நீதிபதிகள் குடியிருப்பில் தொகுதி–எ2–இல்,

நீதித்துறை பயிற்சிக் கழகம் ஒன்று 23.04.2001 அன்று துவக்கப்பட்டது. 10.02.2002 அன்று சென்னையிலுள்ள இராஜா அண்ணாமலைபுரம், பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையில் ரூ.4.50 கோடி செலவில் நீதித்துறைப் பயிற்சிக் கழக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 25.07.2004 அன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பயிற்சிக் கழகத்திற்கு 2006–ஆம் ஆண்டு முதல், ஆண்டு தோறும் ரூ.15.00 இலட்சம் மானியமாக அரசு வழங்கி வருகிறது. இப்பயிற்சிக் கழகமானது, சென்னை உயர்நீதிமன்றத்தின் நிருவாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்ட நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதிகள், உரிமையியல் நீதிபதிகள், நீதித்துறைப் பணியாளர்கள் மற்றும் புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகள் போன்ற நீதித்துறை அலுவலர்களுக்கு வளர்ந்து வரும் சட்டம், சமூகம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பணித்திறனை வளர்த்துக்கொள்ள ஏதுவாக, பயிற்சி வழங்குவதே இப்பயிற்சிக் கழகத்தின் நோக்கமாகும்.

**21.2.** நீதித்துறை அலுவலர்களுக்கு ஆண்டு முழுவதும் மேற்கண்ட பயிற்சியினை திறம்பட வழங்கி வருவதால், இப்பயிற்சிக் கழகத்தினை ஊக்குவிப்பது அவசியமாகிறது. எனவே, மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் மண்டல மையங்களான, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மண்டல

பயிற்சிக் கழகங்கள் கட்டுவதற்காக ரூ.17.00 கோடி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இதில் கோயம்புத்தூர் மண்டல பயிற்சி மையக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரை மண்டல பயிற்சி மையக் கட்டடப் பணிகள் துவங்கும் நிலையில் உள்ளன. நீதித்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக, தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு, 2010–2011–ம் ஆண்டிற்கு ரூ.2.47 கோடி அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் (ஏற்கனவே விரைவு நீதிமன்றங்களாக செயல்பட்டவை)**

21.3. 2001–ஆம் ஆண்டு 49 விரைவு நீதிமன்றங்கள் (கூடுதல் மாவட்ட நீதிபதி தரத்தில்) அமைக்க தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த 49 விரைவு நீதிமன்றங்களில், 30 நீதிமன்றங்கள் ஆகஸ்டு 2001–ஆம் ஆண்டும் மற்றும் 19 நீதிமன்றங்கள் டிசம்பர் 2001–ஆம் ஆண்டும் அமைக்கப்பட்டன. இதன் விவரம் இணைப்பு–6ல் கொடுக்கப்பட்டுள்ளது. 26.08.2011–ஆம் நாளிட்ட அரசாணை மூலம் இந்த விரைவு நீதிமன்றங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியாளர்களுடன் நிரந்தர நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்த விரைவு நீதிமன்றங்கள் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

**விரைவு நீதிமன்றங்கள் (குற்றவியல் நீதிபதி பதவி தரத்தில்)**

**21.4.** தமிழகத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசால் **50** விரைவு நீதிமன்றங்களை அமைக்க ஆணை வெளியிடப்பட்டது. இதில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்திலுள்ள ஒரு விரைவு நீதிமன்றத்தினை குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மாற்றியமைத்து ஆணையிடப்பட்டது. மீதமுள்ள, **49** விரைவு நீதிமன்றங்களில், **39** விரைவு நீதிமன்றங்களை அமைப்பதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டது. இந்த நீதிமன்றங்களில், **24** விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**நீதிமன்ற மேலாளர்கள்**

**21.5.** நீதிமன்ற மேலாண்மையில் திறனை வளர்த்து, நீதித்துறைப் பணியில் முழுக்கவனத்துடனும், நிருவாகப் பணிகளில் திறம்படவும், நீதிபதிகளுக்கு உதவியாகவும் செயல்படுவதற்கு ஏதுவாக, உதவிப் பதிவாளர் பதவி தரத்தில் **33** நீதிமன்ற மேலாளர்கள், அதாவது சென்னை உயர்நீதிமன்றத்திற்கு இரண்டு பணியிடங்களும் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு ஒரு பணியிடமும் மற்றும் மாவட்டத்திற்கு ஒரு பதவி வீதம் **30** பதவிகள் ஒவ்வொரு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திலும் ஏற்படுத்த

அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டு நீதிமன்ற மேலாளர் பணியிடங்கள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

**சார்நிலை நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள்**

**21.6.** தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களுக்கும் சென்னை மாநகரத்தில் உள்ள சார்நிலை நீதிமன்றங்கள் உட்பட, சென்னை டான்சி நிறுவனம் மூலம் புதிய அறைகலன்கள் வாங்குவதற்கு ரூ.**8,96,99,493/–** ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், சென்னை ஜார்ஜ் டவுன் வளாகத்தில் அமைந்துள்ள அனைத்து பெருநகர குற்றவியல் நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வாங்குவதற்கு ரூ.**43,70,898/–** ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாலை நேர நீதிமன்றங்கள்**

**21.7.** மாவட்ட நீதிபதி / முதுநிலை உரிமையியல் நீதிபதி / இளநிலை உரிமையியல் நீதிபதி ஆகிய பதவி தரத்தில் உள்ள நீதிபதிகளைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று நீதிமன்றங்கள் வீதம் **30** மாவட்டத்திற்கு **90** மாலை நேர நீதிமன்றங்கள் ரூ.**3,92,40,000/–** செலவில் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்து ஆணை வெளியிட்டுள்ளது. மாலை நேர நீதிமன்றங்கள் தேங்கிக்கிடக்கும் சிறு வழக்குகளை துரிதமாக

விசாரணை செய்து மற்ற நிரந்தர நீதிமன்றங்களின் பணிச் சுமையைக் குறைப்பதுடன், நீதிமன்ற நேரத்தினையும் சேமிக்க உதவுகிறது. மாலை நேர நீதிமன்றங்கள் நிரந்தர நீதிபதிகளை கூடுதல் ஊதியத்தினை அளித்தோ அல்லது ஓய்வு பெற்ற நீதிபதிகளுக்கு மதிப்பூதியம் வழங்கியோ அவர்களது பணியினை பயன்படுத்திக்கொள்கின்றன.

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு ஆகிய வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்**

**21.8.** மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் எட்டு சிறப்பு நீதிமன்றங்களும், முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் பதினேழு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அசல் மனு வழக்குகளை விசாரணை செய்வதற்கென முதுநிலை உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் ஆக மொத்தம் **29** சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க **ரூ.49,21,44,000/-**ஐ ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**நில அபகரிப்பு தொடர்பான புகார்களை விசாரணை செய்வதற்கென சிறப்பு நீதிமன்றங்கள்**

**21.9.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நில அபகரிப்பு தொடர்பான புகார்களை விசாரணை செய்வதற்கு மாநிலத்திலுள்ள நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் சிறப்புக் காவல் பிரிவுகளை ஏற்படுத்த ஆணையிட்டதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து ஏராளமான நில அபகரிப்புப் புகார்கள் பதிவாயின. இப்புகார்களின் மீது விசாரணையை விரைவுபடுத்துவதன் அவசியத்தை அரசு உணர்ந்ததாலும், நிரந்தர நீதிமன்றங்களில் விசாரணை நடத்தப்பட்ட வழக்குகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு காலதாமதம் ஆகும் என கருதியதாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காலத்தில் நீதி கிடைக்கச் செய்யும் நோக்கத்தோடு, சென்னையில் இரண்டு நீதிமன்றங்கள் உட்பட, மாநிலத்தில் உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் 25 சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தவும் மற்றும் 350 நீதிமன்றப் பணியாளர்களை நியமனம் செய்யவும், தொடர் செலவினமாக ரூ.9,20,21,000/–ம், உட்கட்டமைப்பு வசதிகளை செய்வதற்காக தொடராச் செலவினமாக ரூ.1,56,50,000/–ம் ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் விவரம் இணைப்பு–5ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**மாற்றுத் தீர்வு மையங்கள்**

**21.10.** இவ்வரசு மூன்றாவது முறையாக பதவியேற்றவுடன், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், மாற்றுத் தீர்வு மையக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.4.20 கோடியை ஒப்பளிப்புச் செய்து ஆணையிட்டுள்ளது. மேற்காணும் கட்டடப் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா 16.07.2011 அன்று நடைபெற்றது. மேலும், அரசு 29 மாவட்டங்களில் மாற்றுத் தீர்வு மையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.29.00 கோடியை ஒப்பளிப்பு செய்து ஆணையிட்டுள்ளது.

## 22. 2012–2013 ஆம் ஆண்டில் பகுதி–2–இன் கீழான திட்டங்கள்

2012–13 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ், பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன:

| வரிசை எண். | பணிகள் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சென்னை உயர்நீதிமன்ற வளாக நிலப்பரப்பில் புல்வெளித் தரை அமைத்தல் மற்றும் பூந்தோட்டங்கள் ஏற்படுத்துதல் | 13.65 |

| வரிசை எண். | பணிகள் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2 | ஈரோட்டில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலுள்ள ஈரோடு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஈரோடு 2–வது மற்றும் 3–வது குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வாங்குதல். | 1.94 |
| 3 | இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்திற்கு அறைகலன்கள் வாங்குதல். | 1.40 |
| 4 | பவானி 4–வது விரைவு நீதிமன்றத்திற்கு அறைகலன்கள் வாங்குதல். | 0.63 |
| 5 | சார்பு நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வாங்குதல் | 43.32 |
| 6. | அரசு வழக்காடும் துறைக்கு சட்ட நூல்கள், அறைகலன்கள் மற்றும் ஒளிநகல் கருவி வாங்குதல் | 7.00 |
| 7. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்திற்கு 3 டிஜிட்டல் ஒளிநகல் எடுக்கும் கருவி வாங்குதல் | 3.51 |
| | மொத்தம் | 71.45 |

## 23. முடிவுரை

இன்று ஏற்பட்டுள்ள நவீனமயம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகள், சமூக, பொருளாதார மற்றும் அரசியல்ரீதியான

பல்வேறு மாற்றங்களையும், பலதரப்பட்ட பிரச்சனைகளையும் ஏற்படுத்துகின்றன. இப்பிரச்சனைகளை விரைவாகவும், செயல்திறனுடனும் நீதிமன்றங்கள் மூலமாக கையாள வேண்டியுள்ளது. மேற்கூறிய சமூக, பொருளாதார நீதியை வேகமாக பெறுவதற்கும், நீதித் துறையில் சுதந்திரத்தினைப் பேணிப் பாதுகாக்கவும், அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு தொடர்ந்து மேற்கொள்வதைத் தனது கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**சி.வி. சண்முகம்,**
**வணிகவரி & பதிவு, சட்டம்,**
**நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**

## இணைப்பு – 1

*(பத்தி 2.1. – ஐக் காண்க)*

### தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு

**முதன்மை இருப்பிட உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை**

↓

| *உரிமையியல் நீதிமன்றங்கள்* | |
|---|---|
| *சென்னை மாநகர்* | *வெளியூர்* |
| சென்னை நகரத்திற்குள் எழும் ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் விசாரிக்கின்றது | மாவட்ட நீதிமன்றங்கள் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றம் | சார்பு நீதிமன்றங்கள் |
| சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |

| *குற்றவியல் நீதிமன்றங்கள்* | |
|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் |
| பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் |
| | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |

## இணைப்பு – 2

*(பத்தி 3 – ஐக் காண்க)*

### சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| வரிசை எண் | நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர் | மாவட்ட நீதி மன்றங்கள் | விரைவு நீதி– மன்றங்கள் | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | உரிமையியல் நீதிபதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | பெருநகர் குற்றவியல் நடுவர். | இதர வகை பிரிவு | |
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 15 | 5 | -- | 18 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | 8 | 8 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2 | 3 | 1 | 6 | 17 |
| 4. | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 5. | தொழில் தீர்ப்பாயம் (தொழில் நடுவர் நீதிமன்றம்) | 1 | -- | -- | -- | -- |
| 6. | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | 1 | -- |
| 7. | அரசு போக்குவரத்து மேல்முறையிட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 8. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றங்கள் | 1 | -- | -- | -- | -- |
| 9. | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | -- | -- | -- | -- |
| 10. | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | -- | -- | -- | -- | 1 |
| 11. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 12. | மகளிர் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | -- | -- |
| 13. | 1997 – ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தனி நீதிமன்றங்கள் | 1 | -- | -- | -- | -- |
| 14. | போதைமருந்துகள் மற்றும் மனமயக்க பொருட்கள் தடுப்புச்சட்டத்தின் (Narcotic, Drugs and Pshycotropic Substances Act) கீழ் கூடுதல் தனி நீதிமன்றங்கள் | 2 | -- | -- | -- | -- |
| 15. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 16. | சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 17. | செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | -- | -- | -- | 1 | -- |
| 18. | ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் | -- | -- | -- | 1 | -- |
| | **மொத்தம்** | **37** | **8** | **1** | **35** | **27** |
| **மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை – 108<br>( மாவட்ட நீதிபதிகள் –37, கூடுதல் மாவட்ட நீதிபதிகள் (விரைவு) –8, முதுநிலை உரிமையியல் நீதிபதி –36 உரிமையியல் நீதிபதி –27)** | | | | | | |

## இணைப்பு – 3

*(பத்தி 3 – ஐக் காண்க)*

### மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| | | மாவட்ட நீதிபதி நிலை | | | | | | | | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | | | | | உரிமையியல் நீதிபதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண். | மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடிமையியல் பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு நீதிமன்றங்கள் | இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மத்திய புலனாய்வுத்துறை வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நல நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றங்கள் | முதலீட்டாளர்கள் பாதுகாப்பு நீதிமன்றம். | விரைவு நீதிமன்றங்கள் | தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் நில எடுப்பு வழக்குகள் | ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் | சட்டப்பணிகள் ஆணைக்குழு | மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் / விற்பனை வரிமேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் | மாவட்ட உரிமையியல் நீதிபதி | குற்றவியல் நடுவர் நீதிபதி | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 1. | அரியலூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | 1 | 2 | -- | -- | -- | 3 | 2 | -- |
| 2. | கோயம்புத்தூர் | 2 | -- | 1 | -- | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 1 | 8 | -- | 1 | 1 | 3 | 9 | 18 | 2 |
| 3. | கடலூர் | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | 1 | -- | 3 | 1 | 8 | -- | | -- | -- | 9 | 9 | 4 |
| 4. | தருமபுரி | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 2 | -- | -- | -- | -- | 3 | 5 | 2 |
| 5. | திண்டுக்கல் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 3 | -- | -- | 1 | -- | 5 | 7 | 3 |
| 6. | ஈரோடு | 2 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 4 | 1 | 8 | -- | -- | -- | 1 | 10 | 11 | 2 |
| 7. | காஞ்சிபுரம் | 2 | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | 1 | 1 | 5 | -- | -- | -- | -- | 7 | 8 | 3 |
| 8. | கன்னியாகுமரி | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 6 | -- | | -- | -- | 9 | 7 | 1 |
| 9. | கரூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 3 | -- | -- | -- | -- | 3 | 5 | -- |

தொடர்ச்சி .....

இணைப்பு – 3 –ன் தொடர்ச்சி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10. | கிருஷ்ணகிரி | 2 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 3 | -- | -- | -- | -- | 1 | 4 | 4 |
| 11. | மதுரை | 2 | 1 | -- | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 | 6 | -- | 1 | 1 | 2 | 5 | 10 | 2 |
| 12. | நாகப்பட்டினம் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 3 | -- | -- | -- | -- | 4 | 5 | 1 |
| 13. | நாமக்கல் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 3 | -- | -- | -- | -- | 5 | 5 | 1 |
| 14. | நீலகிரி | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | 3 | 3 | 2 |
| 15. | பெரம்பலூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- |
| 16. | புதுக்கோட்டை | 1 | -- | -- | -- | -- | 1 | -- | -- | 1 | -- | 1 | 1 | 1 | -- | -- | -- | -- | 2 | 3 | 2 |
| 17. | இராமநாதபுரம் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 2 | -- | -- | -- | -- | 3 | 4 | 3 |
| 18. | சேலம் | 2 | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | -- | 2 | 1 | 6 | -- | -- | 1 | 1 | 6 | 13 | 1 |
| 19. | சிவகங்கை | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 2 | -- | -- | -- | -- | 4 | 3 | 4 |
| 20. | தஞ்சாவூர் | 1 | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | 2 | 1 | 6 | -- | -- | 1 | -- | 5 | 7 | 3 |
| 21. | தேனி | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 3 | -- | -- | -- | -- | 3 | 5 | 2 |
| 22. | தூத்துக்குடி | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 2 | 1 | 2 | -- | -- | 1 | 1 | 6 | 6 | 2 |
| 23. | திருச்சிராப்பள்ளி | 1 | 1 | -- | -- | 1 | -- | -- | -- | 1 | -- | 2 | 1 | 4 | -- | 1 | 1 | 1 | 8 | 9 | 1 |
| 24. | திருநெல்வேலி | 2 | 1 | -- | -- | 1 | -- | -- | -- | 1 | -- | 2 | 1 | 7 | -- | -- | 1 | 1 | 12 | 9 | 4 |
| 25. | திருவள்ளூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 4 | 1 | 4 | -- | -- | -- | -- | 8 | 10 | 1 |
| 26. | திருவண்ணாமலை | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 4 | -- | -- | -- | -- | 7 | 6 | 3 |
| 27. | திருவாரூர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 2 | -- | -- | -- | -- | 3 | 5 | 3 |
| 28. | வேலூர் | 1 | -- | -- | -- | 2 | -- | -- | -- | -- | -- | 3 | 1 | 5 | -- | -- | 1 | 1 | 10 | 16 | 4 |
| 29. | விழுப்புரம் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 3 | 1 | 7 | -- | -- | -- | -- | 16 | 10 | 2 |
| 30. | விருதுநகர் | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 4 | -- | -- | -- | -- | 4 | 8 | 2 |
| | **மொத்தம்** | **37** | **4** | **1** | **1** | **8** | **7** | **2** | **3** | **9** | **2** | **44** | **28** | **120** | **2** | **3** | **9** | **11** | **174** | **214** | **64** |
| | | **மாவட்ட நீதிபதி தரத்தில் மொத்தம்–74** | | | | | | | | | | **விரைவு நீதிமன்றங்கள் மொத்தம் 44** | **முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் மொத்தம் 173** | | | | | | **உரிமையியல் நீதிபதி தரத்தில் மொத்தம் 452** | | |

## இணைப்பு – 4

*(பத்தி 9 (ந) –வைக் காண்க)*

### மாநிலத்தில் செயல்படும் மாலைநேர நீதிமன்றங்கள் பற்றிய விவரம்

| வ.எண் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 5 |
| 2. | கோயம்புத்தூர் | 4 |
| 3. | கடலூர் | 2 |
| 4. | திண்டுக்கல் | 1 |
| 5. | ஈரோடு | 3 |
| 6. | காஞ்சிபுரம் | 4 |
| 7. | கன்னியாகுமரி | 4 |
| 8. | கரூர் | 1 |
| 9. | கிருஷ்ணகிரி | 2 |
| 10. | மதுரை | 1 |
| 11. | நாகப்பட்டினம் | 3 |
| 12. | நாமக்கல் | 1 |
| 13. | பெரம்பலூர் | 1 |
| 14. | புதுக்கோட்டை | 1 |
| 15. | இராமநாதபுரம் | 1 |
| 16. | சேலம் | 2 |
| 17. | சிவகங்கை | 1 |
| 18. | தஞ்சாவூர் | 1 |
| 19. | தேனி | 1 |
| 20. | தூத்துக்குடி | 1 |
| 21. | திருச்சிராப்பள்ளி | 2 |
| 22. | திருநெல்வேலி | 6 |
| 23. | திருவள்ளூர் | 2 |
| 24. | திருவண்ணாமலை | 1 |
| 25. | திருவாரூர் | 1 |
| 26. | திருப்பூர் | 1 |
| 27. | வேலூர் | 1 |
| 28. | விழுப்புரம் | 1 |
| 29. | விருதுநகர் | 1 |
| **மொத்தம்** | | **56** |

## இணைப்பு – 5

*(பத்தி 21.9.) –வைக் காண்க.)*

### நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மாநகரம் | 2 |
| 2. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1 |
| 3. | கடலூர் | கடலூர் | 1 |
| 4. | தருமபுரி | தருமபுரி | 1 |
| 5. | ஈரோடு | ஈரோடு | 1 |
| 6. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 1 |
| 7. | கரூர் | கரூர் | 1 |
| 8. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 1 |
| 9. | மதுரை | மதுரை மாநகரம் | 1 |
| 10. | நாமக்கல் | நாமக்கல் | 1 |
| 11. | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 |
| 12. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1 |
| 13. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1 |
| 14. | சேலம் | சேலம் மாநகரம் | 1 |
| 15. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 |
| 16. | நீலகிரி | உதகமண்டலம் | 1 |
| 17. | தேனி | தேனி | 1 |
| 18. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாநகரம் | 1 |
| 19. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 1 |
| 20. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகரம் | 1 |
| 21. | திருப்பூர் | திருப்பூர் | 1 |
| 22. | திருவள்ளூர் | திருவள்ளூர் | 1 |
| 23. | விழுப்புரம் | விழுப்புரம் | 1 |
| 24. | விருதுநகர் | விருதுநகர் | 1 |
| | | **மொத்தம்** | **25** |

## இணைப்பு – 6

*(பத்தி 21.3.) –வைக் காண்க.)*

**மாநிலத்தில் செயல்படும் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களின் (ஏற்கனவே விரைவு நீதிமன்றங்களாக செயல்பட்டவை) விவரம்**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | அரியலூர் | 1 |
| 2. | சென்னை | சென்னை | 5 |
| 3. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 3 |
| 4. | கடலூர் | கடலூர் | 1 |
| | | சிதம்பரம் | 1 |
| | | விருதாச்சலம் | 1 |
| 5. | தருமபுரி | தருமபுரி | 1 |
| 6. | திண்டுக்கல் | திண்டுக்கல் | 1 |
| 7. | ஈரோடு | ஈரோடு | 1 |
| | | பவானி | 1 |
| | | கோபி செட்டிபாளையம் | 1 |
| | | தாராபுரம் | 1 |
| 8. | காஞ்சிபுரம் | செங்கல்பட்டு | 1 |
| 9. | மதுரை | மதுரை | 3 |
| 10. | நாமக்கல் | நாமக்கல் | 1 |
| 11. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1 |
| 12. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1 |
| 13. | சேலம் | சேலம் | 2 |

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 14. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 |
| | | பட்டுக்கோட்டை | 1 |
| 15. | தேனி | பெரியகுளம் | 1 |
| 16. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 2 |
| 17. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 2 |
| 18. | திருநெல்வேலி | திருநெல்வேலி | 2 |
| 19. | திருவள்ளூர் | திருவள்ளூர் | 1 |
| | | பூந்தமல்லி | 2 |
| | | பொன்னேரி | 1 |
| 20. | வேலூர் | வேலூர் | 1 |
| | | திருப்பத்தூர் | 1 |
| | | இராணிப்பேட்டை | 1 |
| 21. | விழுப்புரம் | கள்ளக்குறிச்சி | 1 |
| | | திண்டிவனம் | 2 |
| 22. | விருதுநகர் | விருதுநகர் | 1 |
| 23. | திருப்பூர் | திருப்பூர் | 2 |
| | | **மொத்தம்** | **49** |

## இணைப்பு – 7

*(பத்தி 5.2. – ஐக் காண்க)*

**உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள்**

**தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த அட்டவணை**

**உயர்நீதிமன்ற முதன்மை ஆயம், சென்னை.**

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவை யில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஜனவரி முதல் தேதியன்று ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | டிசம்பர் 31 அன்று நிலுவை | ஜனவரி முதல் தேதியன்று ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | டிசம்பர் 31 அன்று நிலுவை | |
| 1. | 01-01-2007 முதல் 31-12-2007 | 316096 | 133594 | 113606 | 336084 | 26414 | 56272 | 53274 | 29412 | 365496 |
| 2. | 01-01-2008 முதல் 31-12-2008 | 336084 | 126767 | 119358 | 343493 | 29412 | 47764 | 44065 | 33111 | 376604 |
| 3. | 01-01-2009 முதல் 31-12-2009 | 343493 | 124860 | 151822 | 316531 | 33111 | 52350 | 56643 | 28818 | 345349 |
| 4. | 01-01-2010 முதல் 31-12-2010 | 316531 | 134681 | 132061 | 319151 | 28818 | 48998 | 43593 | 34223 | 353374 |
| 5. | 01-01-2011 முதல் 31-12-2011 | 319151 | 128799 | 124709 | 323241 | 34223 | 51626 | 44015 | 41834 | **365075** |

## இணைப்பு – 8

*(பத்தி 6.2. – ஐக் காண்க)*

### உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த அட்டவணை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, மதுரை.

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவை யில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஜனவரி முதல் தேதியன்று ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | டிசம்பர் 31 அன்று நிலுவை | ஜனவரி முதல் தேதியன்று ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | டிசம்பர் 31 அன்று நிலுவை | |
| 1. | 01-01-2007 முதல் 31-12-2007 | 56877 | 48693 | 48830 | 56740 | 7571 | 15866 | 16841 | 6596 | 63336 |
| 2. | 01-01-2008 முதல் 31-12-2008 | 56740 | 54633 | 43491 | 67882 | 6596 | 15435 | 15021 | 7010 | 74892 |
| 3. | 01-01-2009 முதல் 31-12-2009 | *65049 | 50996 | 38068 | 77977 | *9843 | 22011 | 23790 | 8064 | 86041 |
| 4. | 01-01-2010 முதல் 31-12-2010 | 77977 | 53047 | 48798 | 82226 | 8064 | 28216 | 23712 | 12568 | 94794 |
| 5. | 01-01-2011 முதல் 31-12-2011 | 82226 | 56602 | 46233 | 92595 | 12568 | 29308 | 25810 | 16066 | **108661** |

* **31–12–2008** ல் நிலுவையில் உள்ள மற்றும் **1–1–2009** ல் உள்ள ஆரம்ப இருப்பு எண்ணிக்கையில் காணப்படும் வேறுபாடு, சென்னை உயர்நீதிமன்றத்தால் குற்றவியல் பல்வகை வழக்குகளை உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கையில் இருந்து, குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கைக்கு மாற்றியதன் விளைவு.

## இணைப்பு – 9

*(பத்தி 5.2. – ஐக் காண்க)*

### சார்நிலை நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஜனவரி முதல் தேதியன்று ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | டிசம்பர் 31 அன்று நிலுவை | ஜனவரி முதல் தேதியன்று ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | டிசம்பர் 31 அன்று நிலுவை | |
| 1. | 01-01-2007 முதல் 31-12-2007 | 443656 | 788435 | 733073 | 499018 | 413153 | 846835 | 830960 | 429028 | 928046 |
| 2. | 01-01-2008 முதல் 31-12-2008 | 499018 | 814711 | 737663 | 576066 | 429028 | 761808 | 750304 | 440532 | 1016598 |
| 3. | 01-01-2009 முதல் 31-12-2009 | 576066 | 857059 | 789015 | 644110 | 440532 | 698114 | 687859 | 450787 | 1094897 |
| 4. | 01-01-2010 முதல் 31-12-2010 | 644110 | 1042385 | 936249 | 750246 | 450787 | 797317 | 756980 | 491124 | 1241370 |
| 5. | 01-01-2011 முதல் 31-12-2011 | 750246 | 929156 | 963700 | 715702 | 491124 | 669013 | 692590 | 467547 | **1183249** |

*******